**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : CC No.12/2015**
**Prosecution Witness : PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **நாகேஷ்வரராவ்** | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused Present )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **29/09/2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரிகள் தரப்பில்)**

இதே வழக்கின் சாராம்சம் கொண்டு ஊத்துக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் இதே எதிரிகள் மீது நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். 02.06.2010 ல் வழக்கு வாபஸ் பெற்று விட்டேன் என்றால் சரிதான். அதன்பின்பு ஒரு 07.09.2011 ல் நானும் எனது குடும்பத்தாரும் 1ம் எதிரியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளோம் என்றால் சரிதான். அது என் தரப்பில் ம.த.சா.ஆ 9 ஆக குறியீடு செய்திருக்கிறேன் என்றால் சரிதான். ம.த.சா.ஆ 9 ல் 11 பத்தியில் மூன்று சொத்துக்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஏற்கனவே போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பேச்சுவார்த்தைகள் செல்லாது என்று வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.7 ல் 2ம் காலத்தில் எதிரிக்கு விற்பனை செய்த நிலங்களில் எனக்கு எந்தவிதமான உரிமையும் அதிகாரமும் கிடையாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

ம.த.சா.ஆ.7 ல் 3ம் காலத்தில் விற்பனை செய்யப்பட்டு அதிலிருந்து வரும் தொகையில் ரூ.4.70 கோடி தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஏற்கனவே 2 விற்பனை பத்திரங்கள் எதிரிகள் பெயரில் போடப்பட்டு மனைகள் விற்கப்பட்டு விட்ட பிறகு எந்த முகாந்திரத்தில் ரூ.4.70 கோடி எதிரிகள் தரவேண்டுமென்று ம.சா.ஆ 7ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த 2 விற்பனை ஆவணங்களில் விற்கப்பட்ட சொத்துக்களுக்கு எதிரிகள் பணம் கொடுக்காததால் தான் ம.சா.ஆ 7 புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டேன். விற்பனை ஆவணங்களின்படி நிலங்கள் 1ம் எதிரிக்கு சொந்தமான பிறகு அதனை மனைகளாக பிரித்து விற்றால் மேலும் அதிக தொகைக்கு விற்கலாம் என்ற யோசனை நான் கொடுத்து ம.சா.ஆ 7 போட்டேன் என்றால் நான் யோசனை கொடுக்கவில்லை அவர் தான் யோசனை கொடுத்தார். ஆனால் ம.சா.ஆ 7 இருவரும் சேர்ந்து புரிந்து போட்டுக்கொண்டோம். 17.10.2009 ஏற்கனவே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதில் நான் மனைகளாக பிரித்து அதனை அதிக விலைக்கு தர முடியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் 17.10.2009ல் எந்த புரிந்துணர்வு ஒப்பந்தமும் நான் போடவில்லை.

இதே சங்கதிகள் குறித்து இதே எதிரிகள் மீது இதே நீதிமன்றத்தில் சிசி. எண். 57/2011ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 01.06.2010ன் புரிந்துணர்வின் படி பணம் எதிரிகள் கொடுக்காததால் போட்டேன். சிசி. எண். 57/2011 என்ற வழக்கையும் நான் வாபஸ் பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 2017ல் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 01.06.2010ல் நிலம் ஒரு மெமோ ஆப்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

செட்டில் மென்ட் மூலம் எதிரிகளுக்கு சென்று விட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 07.09.2011 ல் ஒரு மெமோ ஆப் செட்டில் மென்ட் மூலம் நிலம் எதிரிகளுக்கு சென்றுவிட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

அதனால் 2017 ல் நான் போட்டுள்ள பிரமாணத்தில் சொல்லியுள்ள விவரமான எதிரிகள் எனக்கு பணம் தரவில்லை என்பது தவறானது என்றால் சரியான தகவல் தான் நான் கொடுத்திருக்கிறேன். எதிரிகள் என் மீது போட்ட அசல் வழக்கு மற்றும் குருநாதன் போட்ட அசல் வழக்கு மற்றும் நான் எதிரிகள் மீது வீட்டிற்காக போட்ட அசல் வழக்கு ஆகிய மூன்று வழக்கையும் சமாதானம் ஆகிவிட்டதால் வாபஸ் பெற்றுக்கொண்டோம் என்றால் 07.09.2011 ல் போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி வாபஸ் பெற்றேன். 07.09.2011 ல் போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் **( ம.சா.ஆ 9)** படி நிலத்திற்கு 11.25 கோடி ரூபாய் வருவாய் வரும் என எதிரியை தூண்டி விட்டேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ 9 ல் 2 வது நபரான நான் கொடுத்த உத்தரவாதம் மற்றும் கிராண்டியின் அடிப்படையில் 1 ம் நபரான எதிரி சொத்துக்களை மேம்படுத்த செயல்படுவார் என்று உள்ளது என்றால் சரிதான்.

**வழக்குரைஞரின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA